சென்னையில் மீட்பு பணிகளில் ஈடுபட 10,000 பேருக்கு பயிற்சி!

சென்னை, செப். 17- சென்னையில் வட கிழக்கு பருவமழையின் போது வெள்ளம் ஏற்பட்டால் மீட்பு பணிகளில் ஈடுபட 10,000 பேருக்கு பயிற்சி வழங்க பேரிடர் மேலாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது. பருவ மழை தொடங்க உள்ள நிலையில் சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சிகளில் மண்டல வாரியாக பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மக்களை மீட்பது குறித்து பேரிடர் மேலாண்மைத் துறை, தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை இணைத்து பயிற்சி தர திட்டமிடப்பட்டுள்ளது.

இசுலாமிய மக்களின் பாதுகாவலனாக - சகோதரனாக

என்றென்றும் நிற்கும் இயக்கம் தி.மு.கழக அரசு!

மீலாதுன் நபியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 17- மீலாதுன் நபியை ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் இசுலாமிய மக்களின் பாதுகாவலனாக - சகோதரனாக என்றும் நிற்கும் இயக்கமான தி.மு.க. அரசின் சார்பில் மீண்டும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மீலாதுன் நபி வாழ்த்துச் செய்தி வருமாறு:-

நபிகள் நாயகத்தின் பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடும் இசுலாமிய சகோதரர்கள் அனைவருக்கும் எனது இனிய மீலாதுன் நபி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதர்களிடையே யான வேற்றுமைகளைக் களைந்தெறியவும், அடிமை வணிகம் உள்ளிட்ட சமூக அநீதிகளுக்கு எதிராகவும் அன்றே குரல் கொடுத்தவர் நபிகள் நாயகம் ஆவார். அவரது போதனைகள் அமைதியான, சமத்துவ உலகுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் ஆகும்.

"உழைப்பவர்களின் கூலியை அவர்களது வியர்வை உலரும் முன்பே கொடுத்து விடுங்கள்" என எளியவர்களுக்காகப் பேசினார். "உங்களை நீங்களே பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டாம்" எனப் பணிவுடைமையை வலியுறுத்தினார். "கற்றவண்ணம் நடப்பவரே உண்மையில் கற்றவர்" என வாழ்க்கைக்கான நெறிமுறையை வகுத்துக் காட்டினார். அதன்படியே வாழ்ந்தும் காட்டினார் நபிகள் நாயகம் அவர்கள். அவர் காட்டிய வழியில் வறியவர்க்கு உதவுவது, இயற்கைச் சீற்றம், பெருந்தொற்று உள்ளிட்ட நெருக்கடியான காலங்களில் தன்னலமற்று மக்களுக்காகச் சேவையாற்றுவது, பசித்தோருக்கு உணவளிப்பது என இசுலாமிய மக்கள் வாழ்ந்து சமூக நல்லிணக்கத்தைப் பேணி வருகின்றனர்.

அன்பையும், ஈகையையும் சிறந்த குணங்களாக முன்னிறுத்திய அன்னாரது பிறந்தநாளை இசுலாமிய மக்கள் ஏற்றத்துடன் கொண்டாடி மகிழ்ந்திட 1969ஆம் ஆண்டே அரசு விடுமுறை அளித்தது முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான கழக அரசு. 2001இல் அன்றைய அ.தி.மு.க ஆட்சி இதனை ரத்து செய்த நிலையில், 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தலைவர் கலைஞர் தலைமையிலான கழக அரசு மீலாதுன் நபியை மீண்டும் அரசு விடுமுறையாக அறிவித்தது.

அவரது வழிநடக்கும், நமது திராவிட மாடல் அரசும் இசுலாமிய மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் அன்புடன் செவிமடுத்து நிறைவேற்றி வருகிறது. வக்ஃப் சட்டத் திருத்தமசோதா போன்றவற்றால் அவர்களின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் போது நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் உரக்கக் குரல் கொடுத்து உறுதியாக உடன் நிற்கிறது.

இசுலாமிய மக்களின் பாதுகாவலனாக, அவர்களது சகோதரனாக என்றும் நிற்கும் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் மீண்டும் எனது மீலாதுன் நபி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு மனைவி

ஜாக்குலின் தென்னரசு மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.17 - சிறுகதை மன்னனும் ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், கழக முன்னாள் அமைப்புச் செயலாளருமான எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் மனைவி ஜாக்குலின் தென்னரசு (வயது 85) அவர்கள் நேற்று முன்தினம் மாலை மதுரையில் உடல்நலக் குறைவால் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

மறைந்த ஜாக்குலின் தென்னரசுக்கு பாமினி, தமயந்தி என்ற இரண்டு புதல்விகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பேராவூரணி மிசா மு. கிருட்டிணமூர்த்தி
செப்டம்பர் 17 (2003)

கழகத்தின் ஆரம்ப கால அமைப்புகளில் வட்டச் செயலாளராக பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாக பணியாற்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

ஓராண்டு காலம் மிசா கைதியாகவும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கருஞ்சட்டை நாயகரே! கைகூப்பி வணங்குகின்றோம்!



பேரியக்கம் கண்டவரே!
பெரியார்க்கும் பெரியாரே!
ஆரியத்தின் அடிவேரை
அறுத்தெறிந்த கூர்வாளே!
பூர்வஜென்ம விதிப்பயனைப்
பொய்புரட்டுப் பழங்கதையைச்
சூரியத்தீக் கோளமெனச்
சுட்டெரித்த செஞ்சுடரே!

சிக்கனத்தை விதைத்தவரே!
சீர்திருத்தம் படைத்தவரே!
கொக்கரித்த வைதீகக்
கோட்டைகளை உடைத்தவரே!
எக்கணத்தும் வருணத்தை
எதிர்த்தவரே! எவ்விதத்தும்
மக்களுக்குத் தீமைதந்த
மடமைகளைத் தகர்த்தவரே!

அண்டபகி ரண்டத்தை
ஆண்டவனார் லோகத்தை,
கண்துயிலும் கோலத்தைக்
கடவுள்வண்ட வாளத்தைக்
கொண்டுவந்து நேர்நிறுத்திக்
குத்தீட்டிக் கேள்விகளால்
துண்டுபல துண்டாக்கித்
தோலுரித்துப் போட்டவரே!

மூவர்களை, முனிவர்களை,
முப்பத்து முக்கோடித்
தேவர்களை, தேவியரைத்
தெய்வீகப் புருஷர்களை
ஏவிவிட்ட புராணத்தை,
இதிகாசக் குப்பைகளைத்
தீவிறகு மூட்டிவைத்துத்
தெருவில்போட்டு எரித்தவரே!

மூத்திரப்பை பழுதாகி
முதுகுவடம் பாழாகி
நீத்துஉயிரை விடும்நேரம்
நெருங்கிவந்தும் சோராமல்,
சூத்திரனைப் பஞ்சமனைச்
சுடுசொல்லால் அவமதித்த
சாத்திரத்தை இறுதிவரை
சவுக்கால் அடித்தவரே!

"ஓர்குலத்துக் கொருநீதி"
உரைத்ததனால் வரநேர்ந்த
பேரிழப்பைத் தடுத்தவரே!
பெருமுயற்சி எடுத்தவரே!
கேரளத்தில் வைக்கத்தில்
கீழ்ச்சாதி எனப்பட்டோர்
ஊர்நடுவில் நடப்பதற்கும்
உரிமைபெற்றுக் கொடுத்தவரே!

சரஞ்சரமாய் தொடர்கணைகள்!
சனாதனத்தின் விமர்சனங்கள்!
வருஞ்சுமைகள் என்றறிந்தும்
வரலாற்றைப் புதுப்பிக்க
நெருஞ்சிமுள்ளில் நடந்தவரே!
நெருப்பாற்றைக் கடந்தவரே!
கருஞ்சட்டை நாயகரே!
காலத்தின் தூதுவரே!

பத்துத் தலைமுறைக்குப்
பணம்.சொத்துச் சுகமிருந்தும்
மெத்தைமலர்ப் பஞ்சணையை
மேல்துண்டு போல்உதறி
எத்தனைவெஞ் சிறைவரினும்
ஏற்றுக் கிடந்தவரே!
சத்தியத்தை நிலைநிறுத்தும்
சமதர்மப் போர்க்களத்தில்
எத்தனைவெஞ் சிறைவரினும்
ஏற்றுக் கிடந்தவரே!

பெண்ணுக்கு முன்னுரிமை!
பேச்சுரிமை! எழுத்துரிமை!
கண்முன் அரங்கேறக்
களங்கள் அமைத்தவரே!
கைம்பெண் மறுமணமும்
காதல் திருமணமும்
பைம்பொன் பரிசுபெறப்
பாதை வகுத்தவரே!

படுக்கையறைப் பதுமைகளாய்
பயன்பாட்டுக் கருவிகளாய்
அடுக்களையின் அடிமைகளாய்
அடங்கிக் கிடந்தபெண்கள்
தடுப்பணைகள் அனைத்தையுமே
தவிடுபொடி யாக்கிவிட்டு
மிடுக்குநடை போட்டுவர
விடுதலைபெற் றளித்தவரே!

தடியசைய உடலசையத்
தவழ்காற்றில் வெண்தாடி
முடியசைய நாடெங்கும்
முழக்கமிட்ட அரிமாவே!
கொடியசையத் தேர்மீது
கொலுவிருக்கும் வேந்தனைப்போல்
நெடியமக்கள் ஊர்வலத்தில்
நீந்திவந்த பேரழகே!

ஊழ்வினையை நம்பியவர்
உறக்கம் கலைத்தவரே!
வீழாமல் நடக்க, விடி
வெள்ளியாய் முளைத்தவரே!
தாழாமல் எந்தமிழர்
தலைநிமிரக் களப்போரில்
வாழ்நாள் முழுவதையும்
வழங்கிவிட்டுப் போனவரே!

வள்ளுவனார் எழுத்துக்கும்
வள்ளலார் கருத்துக்கும்
கொள்கை உருக்கொடுத்த
கோமானே! குலப்பகைவர்
எள்ளல் இழிவுரையை
எட்டி உதைத்தவரே!
அள்ளிக் கயமைகளை
ஆழப் புதைத்தவரே!

நாயினுக்கும் கீழாக
நமைப்பேதப் படுத்திவிட்டு
வாயடித்து, நம்தமிழர்
வயிற்றிலும் அடித்துவிட்டுப்
பாய்விரித்த "மனுதர்மம்"
பகுத்தறிவுத் தடியெடுத்து
நீயடித்த அடியால்தான்
நிர்மூலம் ஆனதையா!

விஞ்சும்இட ஒதுக்கீடு!
வேல்விழியார் சொத்துரிமை!
அஞ்சாமல் கொண்டுவந்த
"அர்ச்சகர் சட்டம்" வரை
வஞ்சகத்தை வென்று, செயல்
வடிவம் கொடுத்து, உங்கள்
நெஞ்சில் இருந்தமுள்ளை
நீக்கியவர் "கலைஞர்"அன்றோ!

ஆதவன்போல் ஒளிவீசி
ஐயா, நீ போட்டுவைத்த
பாதையிலே இலட்சியப்
பயணம் நடத்திவரும்
மேதகு முதல்வர்! "முத்து
வேல்கருணா நிதிஸ்டாலின்"
சாதனையின் நல்லாட்சிச்
சரித்திரம் தொடருதையா!

ஆலயத்துக் குள்ளேயே
அனுமதிக்கப் படாதவர்கள்
கோலமிகு அர்ச்சகராய்
கொண்டாடப் படும்அந்தக்
காலம்இதோ வந்தது!உங்கள்
கனவுநன வானதையா!
ஞாலம்உங்கள் திருப்பெயரை
நன்றிசொல்லி வணங்கும்ஐயா!

சாயாத இமயமெனச்
சரியாத வானமென,
ஆயிரம் பிரளயத்தும்
அழியாத கல்வெட்டாய்
தாயகத்தும் அயலகத்தும்
தந்தையே! உமதுபுகழ்
தூயமக்கள் உள்ளத்தில்
சுடர்வீசித் திகழும்ஐயா!

கவிச்சுடர் கவிதைப்பித்தன்

கழகப் பவள விழாவையொட்டி இராணிப்பேட்டை மாவட்டத்தில்

மேலும் 500 இடங்களில் கழகக் கொடி ஏற்றப்படும்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, செப். 17- இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் கழக பவள விழாவையொட்டி செப்டம்பர் 15 முதல் 30 வரை புதியதாக 500 இடங்களில் கழக கொடிகம்பம் நட்டு கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் ஏற்கனவே உள்ள 505 கொடி கம்பங்கள் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு புதுப்பிக்கப்பட்டு மேலும் மாவட்டம் முழுவதும் மாவட்ட கழகத்தின் சார்பில் வழங்கப்படும் புதிய 500 கொடி கம்பங்களை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் நட்டு கட்சி கொடியினை அந்தந்த பகுதியில் உள்ள மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி மற்றும் சார்பு அணிகள் நிர்வாகிகளுடன் ஒன்றிணைத்து கழக உடன்பிறப்புகளுடன் கட்சி கொடியினை ஏற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, செப். 17- இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் நாளை (18.09.2024 - புதன் கிழமை) காலை 10.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் (நெமிலி மேற்கு ஒன்றியம், ரெட்டிவலம் கிராமம், டி.பி.சி. வளாகம்) கூட்டம் நடைபெறும்.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

பொருள்

1. தமிழகத்தில் வரலாற்று சிறப்புமிக்க திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் அவர்களின் நல்லாட்சியில் இந்த கார் உற்பத்தி தொழிற்சாலை 470 ஏக்கர் பரப்பளவில் இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டையில் 9000 கோடி மதிப்பில் சுமார் 5,000 பேர் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கார் உற்பத்தித் தொழிற்சாலையை 28.09.2024 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அடிக்கல் நாட்டு விழா.

2. கழக ஆக்கப் பணிகள் குறித்து,

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.